# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி

முன்னிலை : **திரு.M.பொன்பாண்டி, B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர், பழனி**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 5ம் நாள்**
**2026ம் வருடம் மே மாதம் 19ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.63/2012**

காளிச்சாமி, 48/2012
த/பெ.லேட்.கருப்பணகவுண்டர்,
டி.கே.என்.புதுார் தோட்டத்து சாலை,
ஆயக்குடி கிராமம்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம். .... **புகார்தாரர்**

//–எதிர்–//

1. இராமசாமி, 30/2012
த/பெ.முத்துச்சாமி,
டி.கே.என்.புதுார் தோட்டத்து சாலை,
ஆயக்குடி கிராமம்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

2. சண்முகவேல், 54/2012
த/பெ.காளியப்பகவுண்டர்,
பொன்னாபுரம், ஆயக்குடி கிராமம்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம். ..... **எதிரிகள்**

இந்த வழக்கு 11.09.2012ஆம் நாளன்று இந்த நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டும், புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ராஜமாணிக்கம்,B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.தமிழ்வேந்தன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

1. இந்த வழக்கு புகார் தாக்கல் செய்யப்பட்டு, பின்பு 11.09.2009அன்று புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் (Sworn Statement) பதிவு செய்யப்பட்டு, பின்பு

11.09.2012ம்தேதியன்று முகாந்திரம் இருப்பதால் .இ.தச பிரிவு 447, 341, 506(1)ன் கீழ் கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

2. <u>புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

புகார்தாரரும், எதிரிகளும் உறவினர்கள் என்றும், புகார்தாரருக்கும் , அவரது அண்ணன் கருப்புச்சாமி என்பவருக்கும் பாத்தியப்பட்ட, கிழக்கு ஆயக்குடி கிராமம், சர்வே எண்.44/1பி–ல் அமைந்துள்ள நிலத்தை பொறுத்து, 1ம் எதிரி பழனி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.194/2009ல் தங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரும், அவரது சகோதரர்களும் ஆஜராகி தகுந்த எதிர்வாதம் செய்து வருவதாகவும், அந்த வழக்கில் தற்காலிகமாக Status quo உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், புகார்தாரர் மற்றும் அவரது சகோதரருக்கு சொந்தமான நிலத்திற்குட்பட்ட உயிர்வேலி மரங்களில் 9 வேப்பமரங்கள் மற்றும் 1 ஊஞ்சல் மரம் ஆகியவற்றை வெட்டி எடுத்து செல்வதற்காக எதிரிகள் திட்டமிட்டு, கடந்த 20.07.2009ம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் 1ம் எதிரியின் மாமனாரான 2ம் எதிரி அடியாட்களுடன் தங்களுடைய நிலத்தில் அத்துமீறி நுழைந்து உடன்வந்த அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத சுமார் 15 நபர்களிடம் மரங்களை எல்லாம் வெட்டி எடுங்கடா என்று கூறியதாகவும், மேற்படி சட்டவிரோத செயலை மனுதாரர் ஆட்சேபித்தபோது, மனுதாரரை தடுத்து நிறுத்திய 2ம் எதிரி தன் மருமகன் ராமசாமி சொல்லித்தான் இங்கு வந்ததேன் என்றும், குறுக்கே வந்தால், வெட்டி கொன்றுபோடுவேன் என்றும் மனுதாரரை மிரட்டி, மரங்களை வெட்டாமல் விட மாட்டேன் என்றும், மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் வெளியேற்றாமல் விடமாட்டேன் என்று சென்றதாகவும், எதிரியின் நடவடிக்கையால் பயந்துபோன மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் தோட்டத்துசாலையில் இருந்துவிட்டு, மறுநாளான 21.07.2009ம் தேதி ஆயக்குடி காவல் நிலையத்தில் இதுதொடர்பாக புகார் கொடுத்ததாகவும், எதிரிகள் காவல்

நிலையத்தில் ஆஜராகததால் விசாரிக்க இயலவில்லை என்று காவல் நிலையத்தார் கூறியதாகவும், எதிரிகள் ஆள்பலமும், பணம் பலமும் உடையவர்கள் என்பதால் எந்த நேரத்திலும் மனுதாரருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், அவரது சகோதரருக்கும் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதோடு, உடமைகளுக்கும் பெருத்த நஷ்டமும், இழப்பும் ஏற்பட்டுவிடும் என்பதால் இந்த தனிப்புகாரை விசாரணைக்கு எடுத்து உத்தரவு பிறப்பிக்கவேண்டி புகார் தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.சவின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் முன்னிலையானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 208ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. இந்த வழக்கில் சட்டப்பிரிவுகள் இ.த.ச 447, 341, 506(1) ஆக இருந்தாலும், இந்த வழக்கில் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 251ன் கீழான குற்றம் குறித்து சாராம்சத்தை விளக்கிக்கூறப்படாமல் புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், இந்த வழக்கானது அழைப்பாணை விசாரணை நடைமுறையிலிருந்து கு.விமு.ச பிரிவு 249ன் கீழ் பிடியாணை விசாரணை நடைமுறையாக பின்பற்றப்பட்டுள்ளது என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, கு.வி.மு.ச பிரிவு 244ன் கீழ் சாட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. கு.வி.மு.ச 244ன் கீழ் புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு வந்தபோது, புகார்தாரர் P.W.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். குப்புச்சாமி என்பவர் P.W.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். கருப்புச்சாமி என்பவர் P.W.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். Ex.P.1 முதல் Ex.P.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5. P.W.1ன் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>**

P.W.1 தனது சாட்சியத்தில், 1ம் எதிரி ராமசாமி தன் நிலம் சம்பந்தமாக சிவில் வழக்கு தொடர்ந்து அது நிலுவையில் உள்ளதாகவும், மேற்கூறிய நிலத்தில் ஒன்பது வேப்பமரம் மற்றும் ஒரு ஊஞ்சல் மரம் உள்ளதாகவும், நீதிமன்றத்தின் உத்தரவின்படி பிரச்சனைக்குரிய இடத்தில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது என்று தீர்ப்பு உள்ள நிலையில், 20.07.2009ம் தேதியன்று 1, 2 எதிரிகள் சுமார் 12.00 மணியளவில் 15 அடியாட்களை கூட்டிக்கொண்டு வந்து, நிலத்தில் உள்ள மரத்தை வெட்டும்படி கூறியதாகவும், அப்போது தான் அங்கு சென்று அவர்களை தடுத்ததாகவும், அந்த அடியாட்கள் பற்றிய விவரம், பெயர் தெரியாது என்றும், 2ம் எதிரி தன்னை பார்த்து மரத்தை வெட்டாமல் விடமாட்டேன் என்று கூறி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும், தனது குடும்பத்தாரையும் தோட்டத்தை விட்டு விரட்டி விடுவதாக மிரட்டியதாகவும், அதற்கு பயந்து தான் சென்று விட்டு மறுநாள் ஆயக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**<u>6. P.W.2ன் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>**

P.W.2 தனது சாட்சியத்தில், 20.07.2009ம் தேதி மதியம் 12.00 மணியளவில் மரம் வெட்ட 15 ஆட்களை கூட்டிக்கொண்டு அடையாளம் தெரியாத நபர்கள் வந்தார்கள் என்றும், காளிச்சாமி அவர்களை குறுக்காட்ட சென்றார் என்றும், மறுநாள் போலீஸ் ஸ்டேசன் சென்று காளிச்சாமி புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**<u>7. P.W.3ன் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>**

P.W.2 தனது சாட்சியத்தில், புகார்தாரர் தனது சகோதரர் என்றும், 1, 2 எதிரிகள் தனது தோட்டத்துக்கு அருகாமையில் குடியிருந்தபோது தங்களது தோட்டத்திற்குள் அத்துமீறி வந்து தங்களது விவசாய விளை நிலத்திலுள்ள மரத்தை வெட்ட முயன்றதாகவும், அதை தொடர்ந்து காவல் நிலையம் சென்று தாங்கள் புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8. புகார் ஆவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இ.த.ச 447, 341, 506(1) பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, குவிமுச பிரிவு 246ன் கீழ் விளக்கிகூறப்பட்டு, வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்து கூறியுள்ளார்கள்.

9. அதற்கு பிறகு புகார்தாரர் தரப்பில் வேறு எந்த சாட்சியமும் முன்வைக்காத காரணத்தினால் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்சாட்சிகள் என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரிகள் சாட்சிகள் உள்ளது என்று பதில் தெரிவித்து, பின்னிட்டு ஆவண வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படாத நிலையில், எதிரிகள் தரப்பில் மேல்எழுத்து செய்ததன் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. புகார்தாரர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், எதிரிகள் தரப்பு எழுத்து மூலமான வாதுரை ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான இ.த.ச 447, 341, 506(1)பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களானது புகார்தாரர் தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>12. புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்:–</u>

புகார்தாரர் நிலத்தில் அத்துமீறி நுழைந்து, புகார்தாரரை தடுத்து, நிறுத்தி,

புகார்தாரரின் மரங்களை வெட்ட வந்து, அதை புகார்தாரர் தடுத்ததால் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்று P.W.1, P.W.2 மற்றும் P.W.3 ஆகிய சாட்சிகளின் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>13. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் :–</u>

புகார்தாரர் சொல்லியுள்ளது போல் எந்த குற்றமும் செய்யவில்லை என்றும், புகார்தாரர் தரப்புக்கும் எதிரிகள் தரப்புக்கும் இடையே உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக புகார் மனு தாக்கல் செய்யப்பட்டு, எதிரிகள் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் எ்றும், எனவே, எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் வாதம் முன்வைத்துள்ளார். எதிரிகள் தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது.

<u>தீர்வு:</u>

14. மனுதாரரும், எதிரிகளும் உறவினர்கள் என்றும், மனுதாரருக்கும் , அவரது அண்ணன் கருப்புச்சாமி என்பவருக்கும் பாத்தியப்பட்ட, கிழக்கு ஆயக்குடி கிராமம், சர்வே எண்.44/1பி–ல் அமைந்துள்ள நிலத்தை பொறுத்து, 1ம் எதிரி பழனி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.194/2009ல் தங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரும், அவரது சகோதரர்களும் ஆஜராகி தகுந்த எதிர்வாதம் செய்து வருவதாகவும், அந்த வழக்கில் தற்காலிகமாக Status quo உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் மற்றும் அவரது சகோதரருக்கு சொந்தமான நிலத்திற்குட்பட்ட உயிர்வேலி மரங்களில் 9 வேப்பமரங்கள் மற்றும் 1 ஊஞ்சல் மரம் ஆகியவற்றை வெட்டி எடுத்து செல்வதற்காக எதிரிகள் திட்டமிட்டு, கடந்த 20.07.2009ம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் 1ம் எதிரியின் மாமனாரான 2ம் எதிரி அடியாட்களுடன் தங்களுடைய நிலத்தில் அத்துமீறி நுழைந்து உடன்வந்த

அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத சுமார் 15 நபர்களிடம் மரங்களை எல்லாம் வெட்டி எடுங்கடா என்று கூறியதாகவும், மேற்படி சட்டவிரோத செயலை மனுதாரர் ஆட்சேபித்தபோது, மனுதாரரை தடுத்து நிறுத்திய 2ம் எதிரி தன் மருமகன் ராமசாமி சொல்லித்தான் இங்கு வந்ததேன் என்றும், குறுக்கே வந்தால், வெட்டி கொன்றுபோடுவேன் என்றும் மனுதாரரை மிரட்டி, மரங்களை வெட்டாமல் விட மாட்டேன் என்றும், மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் வெளியேற்றாமல் விடமாட்டேன் என்று சென்றதாகவும், எதிரியின் நடவடிக்கையால் பயந்துபோன மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் தோட்டத்துசாலையில் இருந்துவிட்டு, மறுநாளான 21.07.2009ம் தேதி ஆயக்குடி காவல் நிலையத்தில் இதுதொடர்பாக புகார் கொடுத்ததாகவும், எதிரிகள் காவல் நிலையத்தில் ஆஜராகததால் விசாரிக்க இயலவில்லை என்று காவல் நிலையத்தார் கூறியதாகவும், எதிரிகள் ஆள்பலமும், பணம் பலமும் உடையவர்கள் என்பதால் எந்த நேரத்திலும் மனுதாரருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், அவரது சகோதரருக்கும் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதோடு, உடமைகளுக்கும் பெருத்த நஷ்டமும், இழப்பும் ஏற்பட்டுவிடும் என்பதால் இந்த தனிப்புகாரை விசாரணைக்கு எடுத்து உத்தரவு பிறப்பிக்கவேண்டி, எதிரிகள் மீது தனிப்புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

15. இந்த வழக்கில் புகார்தாரர், தன்னுடைய நிலத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்து, புகார்தாரை தடுத்து நிறுத்தி, மரம் வெட்ட வந்தேன் என்று சொல்லி, மிரட்டிவிட்டு சென்றதாக புகார் தாக்கல் செய்யப்பட்டு, சாட்சிகள் முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் புகார்தாரருக்கு புகாரில் சொல்லியுள்ள இடம் உரிமையானது என்று காட்டுவதற்கு உரிமை ஆவணம் எதையும் புகார் தரப்பில் தாக்கல் செய்யாத நிலையில், புகார்தாரரின் சொந்த இடத்தில் எதிரிகள் அத்துமீறி நுழைந்தார்கள் என்று முன்வைத்திருக்கும் குற்றம் நிரூபிப்பதற்கு தேவையான அடிப்படை ஆவணம் முன்வைக்கவில்லை என்று இந்நீமன்றம்

முடிவு செய்கிறது. எனவே, எதிரிகள் அத்துமீறி நுழைந்தார்கள் என்று காட்டுவதற்கு புகார்தாரர் தரப்பில் எந்தவித சாட்சியமும் முன் வைக்கவில்லை என்றும், இ.தச. பிரிவு 447ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. புகார் தரப்பில் P.W.1ன் முதல் விசாரணையில், எதிரிகள் தன்னை செல்ல விடாமல் தடுத்து நிறுத்துகிறார்கள் என்று எந்த சாட்சியும் முன்வைக்கவில்லை. எதிரிகள் மரம் வெட்ட வந்தபோது தடுத்து நிறுத்தினேன் என்று புகார்தாரர் சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் புகார்தாரரை தடுத்து நிறுத்தியதாக எந்தவித சாட்சியமும் இல்லாத நிலையில் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 341ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பில் புகாரில் சொல்லியுள்ள புகார்தாரர் தன்னுடைய நிலச்சொத்து என்று முன்வைத்துள்ள சங்கதியை நிரூபிப்பதற்கு தேவையான நிலச்சொத்து ஆவணம் எதுவும் முன்வைக்காத காரணத்தினாலும், அவ்வாறு புகார்தாரர் நிலத்தில் மரங்கள் இருந்தது என்று காட்டுவதற்கான அடங்கல் போன்ற எந்த ஆவணமும் முன்வைக்காத காரணத்தினாலும், எதிரிகள் தன்னுடைய நிலத்திற்கு வந்து தன்னை மிரட்டினார்கள் என்று புகார்தாரரும், மற்ற சாட்சிகளும் முன்வைத்திருக்கும் சாட்சியம் ஒரு இயற்கையானதாகவும், தொடர்ச்சியாகவும், அடிப்படை கூறுகளை கொண்டதாகவும், சம்பவத்தை உறுதிப்படுத்துவதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 506(1)ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. மேற்கண்ட காரண விவாத பரிசீலனை ஆகியவற்றின் அடிப்படையில், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 447, 341, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 447, 341, 506(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என்றும் இந்நீதிமன்றம் கண்டறிகிறது.

19. எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 447, 341, 506(1)ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>**வழக்குச்சொத்து குறித்த உத்தரவு:-**</u>

20. இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் 2026ம் ஆண்டு மே மாதம் 19ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:43:51 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

<u>**அரசு தரப்பு சாட்சிகள்**</u>.

| | |
|---|---|
| P.W.1 | காளிச்சாமி |
| P.W.2 | குப்புச்சாமி |
| P.W.3 | கருப்புச்சாமி |

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | |
|---|---|
| **Ex.P.1** | புகார் மனு |
| **Ex.P.2** | புகார் மனு ஏற்பு ரசீது |
| **Ex.P.3** | P.W.1 காளிச்சாமிக்கு ஆதரவாக வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவு |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:43:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**<u>குறிப்பு</u>:–**

1. வழக்கின் முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எதிரிகள் வழக்கில் கைது செய்யப்படவில்லை.

Judicial Form No.60
CALENDAR AND JUDGMENT
(For use in cases whether there are more accused persons than one)
District of Dindigul
Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 19.05.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commence ment of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 20.07.2009 | -- | -- | -- | 27.03.2026 | 06.04.2026 | 19.05.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | --<br>--<br>09.09.2009<br>11.09.2009 | -- |

**<u>Judgment in CC 63/2012 on the file of the Judicial Magistrate of Palani</u>**

**Complainant:** Kaalisami, S/o.Late.Karppanagounder

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1) Ramasamy & one other | -- | -- |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Palani | Dindigul |

**Offence** **:** Section 447, 341, 506(1) IPC.

**Sentence** **:** A1 and A2 are acquitted U/s.248(1) of Cr.P.C from the charges of the Sections 447, 341, 506(1) IPC.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:44:03 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**Judicial Form No.61**
**(See Rule 106)**
**ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, Palani**
**JUDGMENT IN CC 63 OF 2012**
**ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI**

**Complainant** : Kaalisami, S/o.Late.Karppanagounder
**Accused** : Ramasamy & one other
**Offence** : Section 447, 341, 506(1) IPC
**Finding** : Accused is found not guilty U/s.447, 341, 506(1) IPC.
**Sentence** : A1 and A2 are acquitted U/s.248(1) of Cr.P.C from the charges of the Sections 447, 341, 506(1) IPC.

**Property** : NIL

| SI. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Ramasamy & one other | -- | --- | --- | Palani | -- |

| **Date of** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Occurrence** | **Complaint** | **Apprehension or appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Close of trail** | **Sentence or order** |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 20.07.2009 | -- | -- | -- | 27.03.2026 | 06.04.2026 | 19.05.2026 |

| **Explanation of delay** |
|---|
| (15) |
| -- |

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:44:09 +0530

**Judicial Magistrate,**
**Palani**

**<u>Case Summary in CC 63/2012</u>**

<table>
<tr><th>S. No</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1</td><td>The Period of Remand of the Accused/Surrender</td><td>--</td></tr>
<tr><td>2</td><td>Date of filing of the Complaint/Final Report in the Court</td><td>--</td></tr>
<tr><td>3</td><td>The date of Commital of the Case to the court of session</td><td>Not applicable</td></tr>
<tr><td>4</td><td>First Questioning u/s 240 of crpc</td><td>27.03.2026</td></tr>
<tr><td>5</td><td>Filling of Miscellaneous petition and result</td><td>Nil</td></tr>
<tr><td>6</td><td>Date of Examination in chief and Cross examination of witness.</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>16.11.2017<br>13.07.2018<br>10.02.2021</td><td>06.02.2019<br>14.11.2025</td></tr>
<tr><td>PW2</td><td>04.09.2019</td><td>14.11.2025</td></tr>
<tr><td>PW3</td><td>17.05.2022</td><td>17.05.2022</td></tr>
</table></td></tr>
<tr><td>7</td><td>NBW Issued date</td><td>NIL</td></tr>
<tr><td>8</td><td>NBW recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Questionings u/s 313(i)(b) of Cr.P.C.</td><td>06.04.2026</td></tr>
<tr><td>10</td><td>Details of Abscondence of an accused and his appearance/production</td><td>NIL</td></tr>
<tr><td>11</td><td>Grant of stay by superior courts and the results there of</td><td>NIL</td></tr>
</table>

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:44:14 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.63/2012**
**Date : 19.05.2026**

Complainant Present. A1, A2 Present. Judgment pronounced in Open Court.

A1 and A2 are acquitted U/s.248(1) of Cr.P.C from the charges of the Sections 447, 341, 506(1) IPC

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.05.19 17:44:19 +0530

**Judicial Magistrate,**
**Palani.**